## கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.184/2023

**அ.சா. 6 (LW 8 )**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | சக்திவேல் | **தொழில்** | |
| **த/க பெயர்** | பரமன் | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **17.09.2025** |

1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**1 வது எதிரி ஆஜர். 2 வது எதிரி இறந்து விட்டார்.**

முதல் விசாரணை

நான் தற்போது சிலுவத்தூரில் குடியிருந்து வருகிறேன். திண்டுக்கல் முருகபவனத்தில் உள்ள பூச்செண்டு பெட்ரோல் பங்கில் கேசியராக வேலை செய்கிறேன். 12 ம் வகுப்பு படித்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜர் மற்றும் அத்தாட்சியில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது அல்ல. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**இந்நிலையில் அரசு தரப்பு வழக்கறிஞர் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154 ன் கீழ் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதி வழங்கப்பட்டது. அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

கடந்த 08.06.2023 அன்று நான் முருகபவனத்தில் உள்ள பூச்செண்டு பெட்ரோல் பங்கிற்கு வேலைக்கு சென்றேனா என்றால் நான் அன்று மாலை 04.00 மணிக்கு பெட்ரோல் பங்கிற்கு வந்தேன். அன்றைய தேதியில் பெட்ரோல் பங்கில் கொலை நடந்தது பற்றி தெரியுமா என்றால் தெரியும். அன்று மாலை 05.30 மணிக்கு திண்டுக்கல் நகர் மேற்கு காவல்நிலைய ஆய்வாளர் வந்து கொலை நடந்த இடத்தை பார்வையிட்டு மகஜர்,வரைபடம் தயார் செய்தார் என்றும் அதில் நானும் காளியப்பனும் கையெழுத்து செய்தோமா என்றால் நான் கையெழுத்து செய்யவில்லை. ஆனால் போலிசார் வந்து பார்வையிட்டார்கள். போலிசார் தயார் செய்த மகஜர்,வரைபடத்தில்

நானும் காளியப்பனும் கையெழுத்து செய்தோம் என்றும் பின்பு மாலை 06.30 மணிக்கு பூச்செண்டு பெட்ரோல் பங்கின் பின்புறம் உள்ள சம்பவ இடத்தில் இரத்தம் பட்ட சிமிண்ட் கல், இரத்தம் படாத சிமிண்ட் கல், TN 64 C 1132 Splender இருசக்கர வாகனத்தை ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றினார்என்றும் அதில் நானும் காளியப்பனும் கையெழுத்து செய்து விட்டு தற்போது எதிரியை வழக்கிலிருந்து விடுவிப்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN

Digitally signed by P VELMURUGAN
Date: 2025.09.17 08:48:13 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.